**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்.சி.ஓ.பி. எண். 82/2024 c/w 83/2024**

**எ.ம.சா. 2**

நாள்: 30.01.2026

2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாலிகா | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

முதன்மை விசாரணை:

நான் இம்மனுவில் 3ம் எதிர்மனுதாரர். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

TN 65 BZ 3188 என்ற டாடா எஸ் வாகனம் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த வாகனம் சரக்குகளை ஏற்றிச்செல்லக்கூடிய வாகனம் என்றால் சரிதான். மனுதாரர்களின் தாயார் காளிம்மாள் மற்றும் சிலர் கோவிலிற்கு செல்வதற்காக என் வாகனத்தை வாடகைக்கு பேசி எடுத்துச்சென்றார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அவ்வாறு வாடகைக்கு பேசி எடுத்துச்சென்ற விவரம் எனக்குத் தெரியும் என்றும், வழக்கிற்காக அதை



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.01.30 16:55:21 +0530

மறைக்கிறேன் என்று சொல்வது சரியல்ல. சரக்குகளை ஏற்றிச்செல்லும் வாகனத்தில், மனிதர்களை பயணிக்க அனுமதித்தால், நான்தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு லாரிதான் காரணம். அவர்கள் தான் இழப்பீடு வழங்க வேண்டும்.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்தபோது மனுதாரர்களின் தாயார் எனக்கு சொந்தமான வாகனத்தில் பயணம் செய்தார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு பின்னால்தான் தெரியும். இறந்துபோன நம்புராஜன் மற்றும் காளியம்மாள் ஆகியோரின் வருமானத்தை நான் மறுக்கும் அளவிற்கு மனுதாரர் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. எனது வாகனம் 4 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். 4 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் மனுதாரர்களுக்கான இழப்பீட்டினை மேற்படி 4 ம் எதிர்மனுதாரர் நிறுவனம் வழங்க வேண்டும் என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.01.30 16:55:24 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .